1981 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, வெகு சீக்கிரமாக.

விளாத்திக்குளம் அரசு மருத்துவ மனைக் கட்டிடம்.

* வினா எண். 237—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் அரசு மருத்துவ மனையில் படுக்கைகள் கொண்ட கட்டிடம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை படுக்கைகள் ?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ), (ஆ) மற்றும் (இ)—இம்மருத்துவமனையில் கூடுதலாக 50 படுக்கை (25 ஆண்கள் 25 பெண்கள்) பிரிவுகள் மற்றும் ஒரு எக்ஸ்ரே பிரிவு முதலியவைகள் புதிதாக கட்டுவதற்காக ரூ. 8.50 இலட்சம் அங்கீகரித்து 18–9–80 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 50 படுக்கைகள் கொண்ட பிரிவுகள் கட்டப் படுவதற்கு ஏற்பாடு செய்ததற்கு நன்றி. அதே நேரத்தில் அந்த ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக மாற்றி கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுக்காலம் ஆகியும் இன்னும் அங்கே மருத்துவர் இல்லாமல் டெபுடேஷன் முறையில் கோவில்பட்டி, தூத்துக்குடியிலிருந்து மருத்துவர்கள் வருகிறார்கள். அந்த கிராம மக்கள் நோயால் பாதிக்கப் பட்டு பெரிய மருத்துவ மனைக்கு செல்ல மிகவும் கஷ்டப்படு கிறார்கள். எனவே உடனடியாக அங்கே ஒரு பெண் மருத்துவரையும், ஒரு ஆண் மருத்துவரையும் ஒரு செவிலியரையும் நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இது ஒன்றியத்தினுடைய டிஸ்பென்சரியாக இருந்து, அரசாங்க டிஸ்பென்சரியாக மாற்றப்பட்டது 5–7–1978-ல். இப்போது அங்கே out-patient room, emergency room, store room, shed, martern room, lumber room, kitchen, etc,

இருக்கின்றன. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன மாதிரி விரைவில் டாக்டர்கள் நியமிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, அவசர கேஸ்களை எடுத்துக்கொண்டால் ஒரு நிரந்தரமான மருத்துவ அதிகாரி கிடைக்கின்ற வரையில் தற்காலிகமாக அந்த நகரில் இருந்து கொண்டு சிகிச்சை அளிக்க ஒரு மருத்துவரை நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அதைத்தான் சொன்னேன். இப்போது அருகாமையில், 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள எட்டையாபுரத்தில் 6 படுக்கைகளும், 35 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கோவில்பட்டியில் 30 படுக்கைகளும் கொண்ட மருத்துவமனைகள் இருக்கின்றன. இந்தக் குறையை உடனடியாக நிவர்த்தி செய்ய அரசாங்கம் ஆணையிடும்.

சத்தியமங்கலத்தில் தாலுகா மருத்துவமனை.

* வினா எண். 238—திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்தியமங்கலத்தில் புதிதாக தாலுகா அளவிலான பெரிய மருத்துவமனை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, இது தாலுகாவாக மாற்றப்பட்டு 6 ஆண்டுகள் ஆகின்றன. அங்கே 6 படுக்கைகள் வசதியுடைய மருத்துவமனைதான் இருக்கிறது. அந்தப் பகுதியில் பின் தங்கிய மலைவாழ் மக்கள் அதிகமாக இருப்பதால் நடப்பாண்டிலேயே அதை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?